கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட / இரண்டாம் அரையாண்டு பொதுக் கலைமாணித் தேர்வு – 2015/2016
(நவம்பர்-டிசம்பர் 2019)

**CH 2212 – Sri Lankan Church History**

**நேரம் : 2 மணித்தியாலங்கள்**

**இவ்வினாப்பத்திரம் பகுதி I, பகுதி II என இரு பகுதிகளைக் கொண்டது.**

**ஒவ்வொரு பகுதியிலிருந்தும் தலா இரண்டு வினாக்கள் வீதம் தெரிவு செய்து மொத்தமாக நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.**

**தவறான விடைகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.**

---

## பகுதி - I

1. I. ‘பத்தரவாதோ’ உடன்படிக்கை என்றால் என்ன? அதனூடாக மேற்கொள்ளப்பட்ட விடயங்கள் யாவை? (10 புள்ளிகள்)
   II. ஒல்லாந்தர் ஆட்சியின்போது கத்தோலிக்கருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட கலாபனையினால் ஏற்பட்ட விளைவுகள் யாவை? (10 புள்ளிகள்)

2. I. ஐரோப்பிய காலனித்துவ ஆட்சி நிறுவப்படுவதற்கு முன்னதாக இலங்கையில் கிறிஸ்தவம் காணப்பட்டமைக்கான சான்றாதாரங்கள் யாவை? (10 புள்ளிகள்)
   II. கிறிஸ்தவ நம்பிக்கை வாழ்வினை வளர்ப்பதில் பாஸ்கு நாடகங்களின் வகிபாகம் யாது? (10 புள்ளிகள்)

3. I. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் மறைபரப்புப் பணியில் ஈடுபட்ட துறவற சபைகளும் அவர்களது சிறப்புப் பணிகளும் யாவை? (10 புள்ளிகள் )
   II. சுதந்திர இலங்கையில் கிறிஸ்தவ நம்பிக்கை வாழ்வினை வாழ்வதில் எதிர்கொள்ளும் சவால்கள் யாவை? (10 புள்ளிகள்)

## பகுதி – II

4. ‘கத்தோலிக்க கிறிஸ்தவ நம்பிக்கை வாழ்வினை வலுவூட்டுவதில் மறைசாட்சிய வாழ்வு இன்றியமையாத இடத்தினை வகிக்கின்றது’ இக்கருத்தின் அடிப்படையில் இலங்கையில் கத்தோலிக்க நம்பிக்கை வாழ்வு வளர்ச்சியுறுவதில் மன்னார் மறைசாட்சிகளின் பங்களிப்பனை வரையறை செய்து, அது எவ்வாறு நம்பிக்கை வாழ்வுக்கு உதவும் என்பதனையும் ஆராய்க. (30 புள்ளிகள்)

5. போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கையில் மறைபரப்புப் பணியில் ஈடுபட்ட துறவறசபைக் குழுக்களையும், அவர்களது மறைபரப்பு போதனை முறைகளையும் பணிகளையும் மதிப்பீடு செய்து, இன்றைய காலகட்டத்தில் நற்செய்திப் பணிக்கு அவர்களது பங்களிப்பு எவ்வகையில் உதவியாக அமையலாம் என்பதனை விளக்குக. (30 புள்ளிகள்)

6. இலங்கையின் கல்விப்பணிக்கு ஒல்லாந்தர் காலத்தில் ஆற்றப்பட்ட சேவைகளை விரிவாக விளக்கி, அவை எவ்வாறு இன்றைய இலங்கையின் கல்விப் பணியிலும் தாக்கம் செலுத்துகின்றன என்பதனை மதிப்பீடு செய்க (30 புள்ளிகள்)